FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319500

1. District : Salem PS: V&AC, Salem Year: 2026 FIR No.: 01/AC/2026 Date: 06.01.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of corruption Act 1988 as amended in 2018. Sections பிரிவுகள்: 7 (a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 1) 23.12.2025 at about 12.00 hrs
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை 2) 26.12.2025 at about 12.15 hrs
Time Period : Time from : Time to : 3) 26.12.2025 at about 16.20 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 06.01.2026 Time : 08.00 hrs.
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 1) Office of the Special Tahsildar, ADW, Attur, Salem District
குற்ற நிகழ்விடம் அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 2) Complainant's House. 60 Km East

Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. S. Eswaran (b) Father's/ Husband's Name : Tr. Sundarajan
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 1985 (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : Mason (g) Address : 496 E, Ambedkar Nagar, Pudupet, Attur, Salem District.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Periyasamy, Assistant, Office of the Special Tahsildar, ADW, Attur, Salem District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheets are enclosed herewith.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

6-1-26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

6/1/2026

15. Date & Time of despatch to the court: 06.01.2026 09.40 hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S. Murugan
Rank: நிலை .....No. எண் .....
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Salem.

சேலம் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 01/AC/2026 சட்டப்பிரிவு 7(a) of PC Act 1988 as amendment in 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி.

சமர்ப்பிக்கப்படுகிறது:

06.01.2026ம் தேதி செவ்வாய்கிழமை காலை 08.00 மணிக்கு சேலம் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, திரு.ஈஸ்வரன் த/பெ சுந்தரராஜன், அம்பேத்கார் நகர், புதுப்பேட்டை, ஆத்தூர், சேலம் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விவரம் பின்வருமாறு: அனுப்புதல், S.ஈஸ்வரன் த/பெ சுந்தரராஜன், 496E, அம்பேத்கர் நகர், புதுபேட்டை, ஆத்தூர், சேலம் மாவட்டம், பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, சேலம், அய்யா, நான் ஆத்தூர் புதுப்பேட்டை அம்பேத்கார் நகரில் எனது குடும்பத்துடன் குடியிருந்துவருகிறேன். நான் 7-ஆம் வகுப்புவரை படித்துள்ளேன். கொத்தனார் வேலைசெய்து குடும்பம் நடத்திவருகிறேன். 1996 ஆம் ஆண்டு எனது அம்மா பச்சையம்மாள் அவர்களுக்கு தமிழ்நாடு அரசு ஆதிதிராவிடர் நலத்துறை மூலமாக ஆத்தூர் புதுபேட்டை அம்பேத்கர் நகரில் சர்வே எண் 639/4, 640/1A மற்றும் 641/6B, பட்டா எண் 97ன்படி மனை எண் 97ல் இலவச வீட்டுமனை கண்டிசன் பட்டா வழங்கப்பட்டது. தற்சமயம் அந்த வீட்டின் பேரில் லோன் எடுக்க வேண்டியிருப்பதால் அதனை எனது பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய எனது அம்மா பச்சையம்மாள் அவர்கள் 08.12.2025 அன்று ஆத்தூர் ஆதிதிராவிடர் நலத்துறை தனி தாசில்தார் அவர்களிடம் NOC கேட்டு மனு கொடுத்திருந்தார். அதன் பின்னர், 23.12.2025ம் தேதி மதியம் சுமார் 12.00 மணிக்கு நான் ஆத்தூர் ஆதிதிராவிடர் நலத்துறை தனி தாசில்தார் அலுவலகம் சென்று எனது அம்மாவின் பெயரில் கொடுத்த மனு தொடர்பாக விசாரித்தேன். அப்போது, அலுவலகத்தில் இருந்த உதவியாளர் பெரியசாமி அவர்கள் என்னிடம் எனது அம்மாவின் மனு மீது நடவடிக்கை எடுத்து NOC பெற ஏற்பாடு செய்ய வேண்டுமென்றால் ரூ.15,000/-ம் செலவாகும் என்றும், பணத்தை தயார் செய்தால்தான் NOC வழங்க ஏற்பாடு செய்ய முடியும் என்றும் சொன்னார். நான் தற்போது அவ்வளவு பணம் இல்லை என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர், 26.12.2025 ஆம் தேதி மதியம் சுமார் 12.15 மணிக்கு நான் ஆத்தூர் ஆதிதிராவிடர் நலத்துறை தனி தாசில்தார் அலுவலகம் சென்று எனது அம்மாவின் பெயரில் கொடுத்த மனு தொடர்பாக உதவியாளர் பெரியசாமி அவர்களிடம் கேட்டேன். அதற்கு அவர், தான் ஏற்கனவே கேட்ட பணம் என்னாச்சு என்று கேட்டார். நான் தற்போது அவ்வளவு பணம் இல்லை

என்று சொன்னேன். அதற்கு அவர், மாலை 4 மணிக்கு நேரில் வந்து இடத்தை பார்த்துவிட்டு மீதியை பேசிக்கொள்ளலாம் என்று சொல்லி எனது போன் நெம்பரை வாங்கிக்கொண்டு என்னை அங்கிருந்து அனுப்பிவிட்டார். அதன் பின்னர், அன்று மாலை சுமார் 04.15 மணிக்கு உதவியாளர் பெரியசாமி அவர்கள் அவரது செல்போன் எண் 9865434456லிருந்து எனக்கு போன் செய்து, என்னுடைய வீட்டிற்கு பக்கத்தில் வந்திருப்பதாகவும், வெளியில் வருமாறு சொன்னார். நான் எனது வீட்டிலிருந்து வெளியில் வந்து, எனது வீட்டினை அவருக்கு காட்டினேன். அவர் வீட்டை பார்த்துவிட்டு, எனது அம்மாவின் மனு சம்மந்தமாக பைல் ரெடிபண்ணி, NOC பெற ஏற்பாடு செய்ய தான் ஏற்கனவே கேட்டவாறு ரூ.15,000/- த்தை தனக்கு தனியாக கொடுக்கவேண்டும் என்று சொன்னார். அதற்கு நான், தினமும் கொத்தனார் வேலைக்கு சென்றுதான் குடும்ப செலவை கவனித்து வருகிறேன் என்றும், என்னால் அவ்வளவு தொகை தர முடியாது என்றும், கொஞ்சம் குறைத்துக் கொள்ளுமாறும் கேட்டேன். அதற்கு அவர், ரூபாய் ரூ.15,000/- த்தை தனக்கு தனியாக கொடுத்தால்தான் பைலை ரெடி செய்து NOC கிடைக்க ஏற்பாடு செய்யமுடியும் என்று உறுதியாக சொல்லிட்டு, பணத்தை ரெடிபண்ணிக்கொண்டு, தன்னை அலுவலகத்திற்கு வந்து பார்க்குமாறு சொல்லிவிட்டு போய்விட்டார். ஆத்தூர் ஆதிதிராவிடர் நலத்துறை தனிதாசில்தார் அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரியும் பெரியசாமி அவர்களுக்கு ரூ.15,000/- த்தை லஞ்சமாக கொடுத்து NOC பெற எனக்கு விருப்பமில்லை. அவர் கேட்டவாறு பணத்தை இப்போதுதான் என்னால் ரெடிபண்ண முடிந்தது. இன்று பணத்துடன் சென்று அவரை சந்திக்க உள்ளேன். எனவே, எனது அம்மாவின் மனு சம்மந்தப்பட்ட பைலை ரெடிசெய்து NOC வழங்க ஏற்பாடு செய்ய என்னிடம் லஞ்சமாக பணம் கேட்ட ஆத்தூர் ஆதிதிராவிடர் நலத்துறை தனி தாசில்தார் அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரியும் பெரியசாமி அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு தங்கள் உண்மையுள்ள, sd/-xxxxxxxx (ஈஸ்வரன்) 06.01.26. Sir, Received the computer typed complaint on 06.01.2026 at 08.00hrs Sd.xxxxxx(S.Murugan), 06.01.2026, Inspr. of Police, V & AC, Salem. Sir, registered a case in Salem V & AC Cr.No. 01/AC/2026 u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 on 06.01.2026 at 08.45 hrs after making a confidential verification on the general reputation of the accused Tr.Periyasamy, Assistant which is learnt to be not good. Similarly, the antecedents of the informant was also verified and nothing came to adverse.

Oral concurrence of the Superintendent of Police, West Range was also obtained. The original complaint and original FIR was sent to the Hon'ble court of Principal District and Sessions Judge, Salem and the remaining copies were sent to the officers concerned. Sd.xxxxxx(S.Murugan), 06.01.2026, Inspr. of Police, V & AC, Salem.

06/01/2026
(S. Murugan)
Inspn. of Police,
V&AC, Salem.